

தென்காசியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் தென்காசி கிழக்கு ஒன்றியம், குத்துக்கல்வலசையில், தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வே. ஜெயபாலன் தலைமையில் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் முத்துக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து தூய்மை பணியாளர்கள் நலவாரிய அட்டையை வழங்கினார். உடன் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் மாநில உறுப்பினர் விழுப்புரம் கண்ணன், விழுப்புரம் மாவட்ட தாட்கோ மேலாளர் ரமேஷ் குமார், பேரூராட்சி செயல் அலுவலர்கலையரசி உள்ளனர்.

### தமிழ்நாட்டின் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமானதைப்போல்

# கழகத்தலைவரின் "ஓரணியில் தமிழ்நாடு" திட்டம் அனைவராலும் பாராட்டப்படும் !

## திருவாரூரில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி.கலைவாணன் இணைந்து பேட்டி!

திருவாரூர், ஜுலை 3-

தமிழ்நாட்டில் திராவிட நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்படும் திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்களும் பின்பற்றி செயல்படுத்த துவங்குவதைப்போல், தற்போது கழக தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் "ஓரணியில் தமிழ்நாடு" திட்டமும் அனைவராலும் பாராட்டப்பட்டு ஓரணியில் இந்தியாவாக உருப்பெறும் என ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் சிறப்பு குறித்து தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச்செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் இணைந்து பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முதல்வர் முக.ஸ்டாலின் அவர்களால் அண்ணா அறிவாலயத்தில் தொடங்கிவைக்கப்பட்ட "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை தொடர்ந்து ,திருவாரூரில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் இணைந்து பத்திரிக்கையாளர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் தெரிவித்ததாவது,

"திராவிடமாடல் நாயகர் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் இன்று வரலாற்று முக்கியத்துமவாய்ந்த ஓரணியில் தமிழ்நாடு என்கிற இயக்கத்தை தொடங்கி தொடங்கிவைத்துள்ளார். திராவிட இயக்க முன்னோடிகளால் தமிழ்நாட்டின் இனம், மொழி, கலாச்சாரங்களை, சுயமரியாதைகளை காப்பாற்றுவதற்காக திராவிட இயக்கம் எப்படி துவங்கப்பட்டதோ, அதேபோல அதே சிந்தனையோடு இந்த இயக்கத்தை தொடர்ந்து வழிநடத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் , இன்று அதே நோக்கத்தோடு ஓரணியில் தமிழ்நாடு இயத்தை தொடங்கி வைத்துள்ளார்.

இது ஏதோ தேர்தலை சந்திப்பதற்காக மட்டும் துவங்கப்பட்ட திட்டமாக இல்லாமல், இன்றைக்கு நாமெல்லாம் இந்த இடத்திற்கு எப்படி படித்து மேன்மைபெற்றோம்? அதற்கு காரணமாக இருந்தது திராவிட இயக்கம்தான். ஆனால் நமக்குள் இருக்கும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் ஒழித்துக்கட்டுவதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க.அரசின் திட்டத்தை அடியோடு முறியடிக்கும் கொள்கையோடு உருவாக்கப்பட்டிருப்பதுதான் இந்த ஓரணியில் தமிழ்நாடு இயக்கம்.

ஒன்றிய பா.ஜ.க.அரசு அதனால்தான் நிதி பங்கீட்டில் தமிழ்நாட்டிற்கு ஓர வஞ்சனை காட்டுகிறது. ஆனாலும் தனது திறமைமிக்க நிர்வாகத்தால் தமிழ்நாட்டை இந்தியாவின் பிற மாநிலங்களை காட்டிலும் வேகமாக வளரும் நாடாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்த்திக்காட்டி வருகிறார். அதனால் கலங்கிபோயிருக்கும் பா.ஜ.க. அரசு நம்மை ஒழித்துக்கட்டும் நோக்கில் செயல்படுகிறது. ஆரம்ப காலத்தில் நம்மால் தொடங்கப்பட்ட மொழிக்கொள்கையிலும் ,வகுப்பு வாரிபிரிதிநிதித்துவம் நிலைப்பாட்டிலும் அதே நிலைப்பாட்டில் இன்றுவரை நம் இயக்கம் இருப்பதால் நம்மை பா.ஜ.க.அரசு நசுக்க நினைக்கிறது.

அந்த தாக்கத்தில் இருந்து மண்ணையும் மொழியையும் மக்களையும் மானத்தையும் காக்கும் நோக்கத்தில் தொடங்கப்பட்டிருக்கும் இந்த "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தின் நோக்கத்தை பத்திரிக்கையாளர்களாகிய நீங்களும் மக்கள் நலனுக்கான இந்த திட்டத்தை மக்கள் மத்தியில் கொண்டுசென்று அடுத்த தலைமுறையை காப்பாற்ற உதவவேண்டும். எல்லா அரசியல் இயக்கங்களும் சமூக அமைப்புக்களும் ஒன்றிணைந்து கலாசாரத்தையும் ஒற்றுமையையும் அழிக்க நினைக்கும் பா.ஜ.க.விட மிருந்து தமிழ்நாட்டை காக்க ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைய வேண்டும்.

ஜுலை 3 லிருந்து ஒவ்வொரு வீடாக சென்று நமக்கு பா.ஜ.க. அரசால் ஏற்படும் தாக்கத்தை எடுத்து சொல்லி, நமது சந்ததிகளை பேராபத்திலிருந்து காக்க வேண்டும். இப்படி ஒரு உன்னதமான திட்டத்தை இந்திய துணைக்கண்டத்திலேயே யாரும் செய்திடவில்லை! நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் முன்னெடுத்துள்ளார். நாட்டின் முதல்வர்கள் தேசியக்கொடி ஏற்றும் உரிமையையும் , கவர்னர்கள்,ஜனாதிபதிகள் போன்றவர்களுக்கு மசோதாக்களின்மீது முடிவெடுக்க காலக்கெடுவை நிர்ணயித்ததும் இந்த திராவிட இயக்க முன்னோடிகளான கலைஞர் அவர்களும் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களும்தான். அதேபோல இன்றைக்கு தமிழ்நாட்டை மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்தியாவை பா.ஜ.க.வின் மதவாத சக்திகளிடம் இருந்து காக்க முதல் முன்னெடுப்பை கழக தலைவர் அவர்கள் "ஓரணியில் தமிழ்நாடு" மூலம் இன்று எடுத்திருக்கிறார்.

இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி கூறி, இருக்கும் உண்மையை மறைக்கும் ஆரிய மாயையை தடுக்க, கீழடி நாகரீகத்தை உலகுக்கு காட்டாமல் தடுத்து, தமிழின் தொன்மையை மறைக்க இந்த ஒன்றிய அரசு முயல்கிறது. அதனை தடுத்து நம்மை இந்த உலகிற்கு அடையாளம் காட்ட உருவாக்கப்பட்டிருக்கும் இயக்கம்தான் இந்த ஓரணியில் தமிழ்நாடு இயக்கம். மொழி காக்கும் போராட்டத்தை முதன்முதலில் கைகளில் எடுத்து இன்றளவும் மொழி காக்கும் இயக்கமாக திராவிட இயக்கம் விளங்குகிறது. அதே போல இன்று தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை காக்கும் ஓரணியில் தமிழ்நாடு போராட்டத்தை திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன்முதலில் கைகளில் எடுத்த தலைவராக திகழ்கிறார்.

தமிழ்நாட்டின் முதல்வர் திராவிட நாயகர் தரும் அற்புத திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்கள் மட்டுமல்ல ,உலக நாடுகளே பினபற்றும் நிலையில் , இன்று நமது முதல்வர் அவர்களால் உருவாக் கப்பட்டிருக்கும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கமும் ஏனைய மாநிலங்களாலும் பின்பற்றும் நிலை வரும். உலகத்தில் எந்த தலைவரும் கொண்டுவராத ஒரு உன்னத திட்டமான நாடுகாக்கும் ஓரணியில் தமிழ்நாடு , ஒன்றிய அரசின் வஞ்சனைகளில் இருந்து தமிழ்நாட்டை காக்கும். ஒன்றிய அரசின் துரோகத்திற்கு எல்லோரும் ஓரணியில் நின்று போராடினால்தான் தமிழ் நாடு அடுத்த கட்டத்திற்கு செல்லும் என்கிற நோக்கத்தில் இந்த ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் ஓரணியில் இந்தியாவாக வலுப்பெறும்.

இவ்வாறு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் இணைந்து பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்தனர்.

### ஒன்றிய அரசின் வஞ்சகத்தை எடுத்துரைப்போம்!

# 'ஓரணியில் தமிழ்நாடு' திட்டத்தில் மக்களை ஒன்றிணைப்போம்!

## திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!



திருச்சி ஜுலை 3 -

ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் மக்களை ஒன்றிணைப்போம் எனவும், திமுக அரசின் சாதனைகளும் ஒன்றிய அரசின் வஞ்சகத்தையும் இளம் தலைமுறை வாக்காளர்களுக்கு அவர்களுக்கு புரியும்படி பக்குவமாக எடுத்துக் கூறுவோம் என திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் பேசியதாவது:-

திருச்சி தெற்கு மாவட்ட திமுகவில் திருவெறும்பூர் மணப்பாறை திருச்சி கிழக்கு ஆகிய மூன்று தொகுதிகள் உள்ளன.

அந்த மூன்று தொகுதிகளிலும் 871 வாக்குச்சாவடிகள் உள்ளன. அந்த வாக்குச்சாவடிகள் நேரடியாக சென்று மக்களிடம் திமுக அரசின் திட்டங்கள் எடுத்து கூறுவது, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு செய்து வரும் வஞ்சகங்களை எடுத்து கூறுவது அதன் மூலம் ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்த திட்டத்தில் மக்களை இணைப்பது மேற்கொள்ள உள்ளோம். மண் மொழி மானம் காக்க தான் ஓரணியில் தமிழ்நாடு என்பது செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்றிய அரசின் மூலமாக வஞ்சிக்கப்படுகிறோம் என மக்களிடம் எடுத்து கூறுவோம்.

தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய கல்வி நிதி வழங்கப்படவில்லை, RTE நிதி வழங்கப்படாமல் உள்ளது. இது போன்றவற்றை மக்களிடம் எடுத்து கூறுவோம். எதிர்கட்சி யினர் வீடுகளாக இருந்தாலும் அவர்கள் வீட்டிற்கு சென்று அவர்களையும் சந்திப்போம். வாக்குச்சாவடியில் எவ்வளவு பேர் இருந்தாலும் அனைவரின் வீட்டிற்கும் செல்லவிருக்கிறோம்.

ஓரணியில் தமிழர்களாக இணைப்பது தான் முதல் இலக்கு, இரண்டாவது தான் விருப்பபட்டவர் களை கட்சியில் சேர்ப்பது. 18 முதல் 25 வயதுள்ள இளைஞர்களை சந்தித்து அவர்களுக்கு புரியும்படி பக்குவமாக திமுக அரசின் சாதனைகளை எடுத்து கூறுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது மாநகர கழக செயலாளர் மதிவாணன், மாவட்டக் கழக நிர்வாகி கள் கோவிந்தராஜ், செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராஜேந்திரன், ராமசாமி, நகரக் கழகச் செயலாளர் காயாம்பு உடன் இருந்தார்கள்.

### செஞ்சி பேரூராட்சியில் தூய்மைபணியாளர் நல வாரியத்தின் சார்பில்

# தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜுலை 3–

செஞ்சி பேரூராட்சியில் தமிழ்நாடு தூய்மைபணியாளர் நல வாரியத்தின் சார்பில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து தூய்மைபணியாளர்கள் நல வாரிய அட்டையை வழங்கினார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விழிப்பு ணர்வு ஏற்படுத்தும் முகாம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது .

நிகழ்ச்சிக்குபேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார்.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் மாநில உறுப்பினர் விழுப்புரம் கண்ணன் முன்னிலை வகித்தார். செஞ்சி பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார். விழுப்புரம் மாவட்ட தாட்கோ மேலாளர் ரமேஷ் குமார் திட்ட விளக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்து தூய்மை பணியாளர்களுக்கு நல வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர் அட்டை உள்ளிட்ட நலத் திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில்நகர செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் அஞ்சலை நெடுஞ்செழியன்,சங்கர், ஜான் பாஷா,சிவகுமார், நூர்ஜகான் ஜாபர்,புவனேஸ்வரி அண்ணாதுரை,லட்சுமி வெங்கடேசன்,பொன்னம்பலம்,துப்புரவு அலுவலர் ராஜா துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில் குமார், செந்தில் முருகன், அரசு ஒப்பந்ததாரர் கௌவுஸ் பாஷ தி.மு.க. நிர்வாகிகள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் செந்தில் குமார்,தொண்டரணி பாஷா, நரசிம்பன், ஹாஜி, பிரபா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .அலுவலக இளநிலை உதவியாளர் பாலாரங்கன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக ஓரணியில் தமிழ்நாடு - கழக உறுப்பினர் சேர்க்கைத் திட்டம்!



## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

**கழகத்தலைவர் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கைத்திட்டம் திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இன்று (03.07.2025 – வியாழக்கிழமை) மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தலைமையில், தொகுதி பார்வையாளர்கள், கிழக்கு தொகுதி பார்வையாளர் கதிரவன், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மணிராஜன், மணப்பறை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மருத்துவர் அண்ணாமலை மற்றும் மாவட்ட பார்வையாளர்கள் முன்னிலையில் கிழ்க்கண்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உறுப்பினர் சேர்க்கைத்திட்டத்தைநான் துவக்கி வைக்க உள்ளேன்.**

**மணப்பாறை தொகுதி** : 1.மணப்பாறை நகரம், 7 வது வார்டு, காலை 7.15 மணி,2. மணப்பாறை ஒன்றியம்சீகம்பட்டி ஊராட்சி7.45 மணி, 3. வையம்பட்டி வடக்குபழையகோட்டை ஊராட்சி காலை 8.15 மணி, 4. வையம்பட்டி தெற்கு ஒன்றியம் இளங்ககுறிச்சி ஊராட்சி காலை8.45 மணி, 5.மருங்கபுரி தெற்கு ஒன்றியம் காரப்பட்டி ஊராட்சி காலை9.00 மணி, 6.பொன்னம்பட்டி பேரூர் 7 வது வார்டு காலை9.15 மணி,

7.மருங்கபுரி மத்திய ஒன்றியம் முத்தால்வார்பட்டி ஊராட்சி காலை9.30 மணி, 8. மருங்கபுரி வடக்கு ஒன்றியம் இடையப்பட்டி ஊராட்சி காலை 9.45 மணி.

**திருவெறும்பூர் தொகுதி**: 1. திருவெறும்பூர் தெற்குஒன்றியம் குண்டூர் ஊராட்சி காலை 10.00 மணி, 2. திருவெறும்பூர் வடக்குஒன்றியம் வாழவந்தான்கோட்டை ஊராட்சி காலை 10.15 மணி,3. துவாக்குடி நகரம் 10 வது வட்டம்காலை 10.30 மணி, 4. கூத்தைபார் பேரூர் 11 வது வார்டு காலை 10.45 மணி, 5. திருவரம்பூர் பகுதி41அ வது வட்டம் காலை11.00 மணி, 6. காட்டூர் பகுதி43அ வட்டம்காலை11.15 மணி,7. பொன்மலை பகுதி45 வது வட்டம்காலை11.30 மணி.

**திருச்சி கிழக்கு தொகுதி** : 1.அரியமங்கலம் பகுதி35 வது வட்டம் காலை 11.45 மணி, 2. கலைஞர் நகர் பகுதி 59வது வட்டம்நண்பகல் 12.00 மணி, 2. பாலக்கரை பகுதி 30 வது வட்டம்நண்பகல் 12.15 மணி, 3. மார்கெட் பகுதி 20 வது வட்டம் நண்பகல் 12.30 மணி, 4. மலைகோட்டை பகுதி 13 அ வட்டம்நண்பகல் 12.45 மணி.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் மற்றும்மாவட்ட பார்வையாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி,ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட, மாநகர அணி அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, BDA தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

### மயிலாடுதுறையில் தெருமுனைக் கூட்டம்!

மயிலாடுதுறை, ஜுலை 3–

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் தெற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசில் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் சங்கரன்பந்தல் இலுப்பூரில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம். சித்திக், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல் மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர் வினோத் பாண்டியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தமிழ்குடிமகன் மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியம் மற்றும் மணலூர்பேட்டை பேரூர்க் கழக இளைஞரணி சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு எனும் தலைப்பிலான திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சியில் கழக 100 அடி கொடிக் கம்பம் அருகில், பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ரவிக்குமார், ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ப.திருநாவுக்கரசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், தொகுதி பார்வையாளர், கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி மற்றும் தலைமைக் கழகப் பேச்சாளர் க.நாகநந்தினி யுவராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்களை எடுத்துரைத்தனர். மேலும் இந்த தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில், பேரூர்க் கழகச் செயலாளர் ஜெய்கணேஷ், ஒன்றியக் கழகச் செயலாளர் பாரதிதாசன், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.